விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆனி 14 றம்ழான் 6 இதழ் 135

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28—6—82


## லெபனானில் கடும்யுத்தம்!

### மக்கள் வெளியேசெல்ல அச்சம்

### பாலஸ்தீனியர்களை வெளியேறுமாறு கோரிக்கை

பெய்ரூட், ஜூன் 27

லெபனானில்இடம்பெற்று வரும் கடும்யுத்தத்தில் பலர் பலியானதாகவும், காய மடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டது

பெய்ரூட்டின் கிழக்கு குன்றுப்பிரதேசத்தில் அடிக்கடி துப்பாக்கிச் சூடுகள் இடம்பெற்றுவருவதாகவும் மக்கள் வெளியே செல்ல அஞ்சுவதாகவும் கூறப்பட்டது.

இப்பிரதேசத்தில் 10 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், பெருமளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் லெபனானின் கிளர்ச்சிப் படைகளுக்கும், இஸ்ரேல் துருப்புக்களுக்குமிடையே தொடர்ந்து கடும்யுத்தம் நடைபெற்று வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையே பாலஸ்தீனியர்களை லெபனானிலிருந்து வெளியேறுமாறு இஸ்ரேல் துண்டுப் பிரசுரங்கள் மூலம் கேட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரங்களை இஸ்ரேலிய விமானங்கள் நேற்று விநியோகித்தன,

பாலஸ்தீனியர்களுக்குஎதிரான பயங்கரப் போராட்டத்தை இஸ்ரேல் கைவிடவில்லை என்றும் இத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

# யாழ். வன்செயல் நஷ்டஈடு:

# இவ்வாரம் வழங்கப்படும்!

(கொழும்பு)

**கடந்த வருடம் மே மாதம் 30ம் திகதி முதல் ஜூன் மாதம் 2ம் திகதி வரை யாழ். மாநகர எல்லைக்குள் நிகழ்ந்த வன்செயல். தீவைப்பு சம்பவங்களினால் பாதிப்புற்றோருக்கு, இவ்வாரம் நஷ்டஈடு வழங்கப்படும்.**

**இது சம்பந்தமான பணத்தை பாதுகாப்பு அமைச்சு யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.**

1981 மே—ஜூன் மாதங்களில் யாழ். மாநகர எல்லைக்குள் நடந்த வன்செயல்கள் சம்பந்தமாக திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர், நஷ்டஈட்டு மதிப்பீடுகளை நடத்தி அரசுக்கு சிபார்சு செய்தது தெரிந்ததே.

லயனல் குழு தனது அறிக்கையில் யாழ்.பொதுசன நூல் நிலையத்துக்கு ஒருகோடி ரூபாவும், ஏனைய நிறுவனங்களுக்கும் தனி நபர்களுக்கும் ஒரு கோடி 24 லட்சம் ரூபாவும் சிபார்சு செய்திருந்தது

யாழ் பொதுசன நூலகம் நஷ்டஈடாக ஒருகோடி 50லட்சம் ரூபாகோரியிருந்தது. நஷ்டஈட்டுக்குழு ஒருகோடி ரூபா சிபார்சு செய்திருந்தது.

யாழ்ப்பாணம எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் சுமார் இருபது லட்சம் ரூபா நஷ்டஈடு கோரியிருந்தார்.

நஷ்டஈட்டு பணமான ஒரு கோடி 24 லட்சம் ரூபாவை திறைசேரி பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்கியதைத் தொடர்ந்து பாதுகாப்புஅமைச்சு யாழ் அரசாங்க அதிபருக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமை அலுவலகம், 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனம், யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இல்லம் மற்றும் வர்த்தக நிலையங்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு மேற்படி தொகையிலிருந்து நஷ்டஈடு வழங்கப்படும்.

நஷ்டஈடு பணத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா இவ்வாரம் வழங்குவார்.

## லெப்டினன்ட் ஸ்ரீதரன் படகுவிபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

அம்பாறை இராணுவ முகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் சே. ஸ்ரீதரன் படகு விபத்து ஒன்றில நேற்று முன்தினம் பலியானார். இவர் புலோப்பளை முன்னாள் கிராமசபைத் தலைவர் எஸ். சேதுகாவலரின் மகனும், சாவகச்சேரி எம்.பி. திரு. வி. என். நவரத்தினத்தின் மருமகனும் ஆவார்.

மூன்று லெப்டினன்ட்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## முகமூடி கொள்ளையர் கைவரிசை!

(யாழ்ப்பாணம்)

முகமூடியணிந்த 5 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி, நள்ளிரவில், கணவனையும் மனைவியையும் துப்பாக்கிமுனையில் கட்டி வைத்து சுமார் 33,000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளது!

இக் கொள்ளைச் சம்பவம் இணுவில் புகையிரதநிலையத்துக்கருகாமையிலுள்ள செல்லையா நவரத்தினம் என்பவரது வீட்டில் நடைபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினமிரவு செல்லையா நவரத்தினமும் அவரது மனைவியும் ஒரு அறையிலும், பிள்ளைகள் தனி அறைகளிலும் படுத்திருந்ததாகவும், இரவு 9-30 மணியளவில் நாய்குரைக்கும் சத்தம் கேட்கவே வீட்டுக்காரர் 'லைட்' போட்டுபார்த்து விட்டு திரும்பவும் வந்து நித்திரைக்குச் சென்றுவிட்டதாகவும், ஒருமணியளவில் இருவர் துப்பாக்கியுடன், அறைக்குள் திடீரெனப் புகுந்து துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்தி, மனைவி அணிந்திருந்த நகைகளைக் கேட்டபொழுது, கழற்றிக் கொடுத்ததாகவும், பின்னர் மேலும் மூவர் சேர்ந்து அறைக்கு வெளியில் இருவரையும் கட்டி வைத்துவிட்டு, பிள்ளைகள்படுத்திருந்த அறைக்குள் சென்று அவர்கள் அணிந்திருந்த நகைகளையும், வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த நகைகளையும். ரொக்கம் 1500 ரூபாவையும் கொள்ளையடித்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும், பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப்பிரிவு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ் சிவராசா, கான்ஸ்டபிள்கள் ஆர். கந்தசாமி, ரி. குணசிங்கம் ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மா)


உ

சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் துந்துபி வருடம் ஆனி மாதம் 16-ம் திகதி (1982-07-01) புதன்கிழமை பின்னிரவு 3-08 மணி தொடக்கம் 3-32 மணிவரை நிகழும் இடபலக்கின சுப முகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைச் செல்வன்<br>**ஜெயசேகர்**<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறைச் செல்வி<br>**சந்திரவதனா**<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் பெரியோர்கள் திருமணம்செய்து வைக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உறவினர்களும், நண்பர்களும் குடும்ப சமேதரராய் வந்து திருமணத் தம்பதிகளை நல்லாசிகூறி வாழ்த்தும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. திருமதி<br>செ. காஞ்சிமாவடிவேல்<br>மயிலியதனை,<br>தொண்டைமானாறு. | திரு. திருமதி<br>ந. திருநாவுக்கரசு<br>காட்டுவளவு,<br>வல்வெட்டித்துறை. |

3689


★ யாழ். நகரில் முட்டைஓவியக் கண்காட்சி:

## வசூலாகும் நிதியை யாழ். பொதுசன நூலக நிதிக்கு தமிழககலைஞர் அன்பளிப்பார்

(பா. அனந்தகிருஷ்ணன்)

''முட்டையின் உட்புறத்தில் ஓவியம் தீட்டும் முறையை இன்று நான்மட்டுமே கையாண்டுவருகிறேன். இந்தியாவில் பலரிடம் இவ்வாறு ஒரு மில்லிமீட்டர் துவாரத்தினூடாக முட்டையினுள் ஓவியம் தீட்டும் முறையைத் தெரிவித்து, யாராவது முயற்சிசெய்து வெற்றிகாண்பார்களா என அறிய முற்பட்டேன். ஒருவரும் இதுவரைக்கும் வரைந்தது கிடையாது. சவால் விட்ட சிலரும் தோல்வியையேயடைந்தனர் இக்கலையின் வெற்றிக்கு பொறுமையும், கற்பனாசக்தியுமே மிக அவசியமானவையாகும்.''

இவ்வாறு கோழிமுட்டைகளின் உட்புறத்தில் ஒரு தீக்குச்சியைப் புகுத்தக்கூடிய அளவு துவாரத்தினூடாக தூரிகை கொண்டு பல அற்புதமான ஓவியங்களைத்தீட்டிவரும் தமிழ்நாடு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியரான திரு. எம். எம். சிவசண்முகம் தெரிவித்தார்.

நம்பமுடியாத அளவுக்கு ஒரு சிறுபகுதியில் ஒரு மில்லி மீட்டர் மட்டுமே அளவான துவாரத்தினூடாக தமது கைவண்ணத்தைக் காண்பித்திருக்கும் அற்புதக்கலைஞனின், முட்டைகளினுள் வரைந்த ஓவியக் கண்காட்சி இன்று யாழ. வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகின்றது.

ஓவியர் திரு. எம். எம். சிவசண்முகம் தமது அரிய ஓவியம் தீட்டும் முறைபற்றி மேலும் கூறியதாவது:''1967-ம்ஆண்டு அப்போது எனக்குப் பதினாறு வயதாக இருந்தது. எனது தாயார் உணவுப் பண்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக முட்டைகள் சிலவற்றைப் பாவித்துவிட்டு கோதுகளை வெளியே குப்பையில்கொண்டு வீசுமாறு என்னிடம் தந்தார். நான் அவற்றைக்கொண்டு வீசியபோது ஒரு கோது சிறுதுவாரத்தினை மட்டும்கொண்டு நொருங்கிவிடாதுமுழுமையாக இருந்தது. இவ்வாறு முழுமையாகசிறுதுவாரத்துடன்இருந்த அக்கோதே இன்று எனது இவ் ஓவியம் தீட்டும் கலைக்கு வித்திட்டது.

''படிப்படியாக எவரும் சிந்திக்காத வகையில் நான்செயல்பட்டு சிறு துவாரத்தினூடாக தூரிகையை நுழைத்து முட்டைக் கோதின் உட்புறத்திலே ஓவியங்களை வரைந்து வெற்றி கண்டேன்.

''முட்டையினுள் வரைவது என்பது இலகுவான காரியமல்ல. ஒரு தாளில் ஓவியம் வரையும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றை இலகுவாக சீர்செய்துகொள்ளலாம். ஆனால் முட்டையினுள் என்றால் எப்படி முடியும்? கீறும்போதுகூட துவாரத்தினூடாக தூரிகையை முட்டையின் மேற்புறம் நொருங்கிவிடாதவாறு மெதுவாக உள்ளே புகுத்தலாம். ஆனால் புகுத்தியபின்னர் உள்ளே கீறப்படுவதை என்னால் பார்க்கவே முடியாது. இந்நிலையில் அதீத கற்பனை வளம்மிக்க ஓவியம் தீட்டும் அங்கதன் ஒருவனைப்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வகுப்புகள்

Scientific Cutting and Dress Making, Cake Icing and Decoration Hair Styles and Beauty Treatment ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. (குறுகிய கால வகுப்புக்களுமுண்டு) வகுப்புக்களில் சேர விரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில்(10-3) மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, The Ladies Academy, இல: 4, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக) 3652

## பயிற்சி

ஒருமாத எலக்றிக்கல் வயரிங்-வெல்டிங், மூன்றுமாத மோட்டார்மெக்கானிக்பயிற்சி 06-07-82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3648

செய்முறை அறிமுறையுடன் வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல் பயிற்சி வகுப்பு 03-07-82 இல். நேரில் வரவும் C. E. T. இலண்ட் இன்ஸ்ரிரியூட் (விகாரைக்கு எதிரில்), 58, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 3655

## தேவை

நல்ல லாபம் தரக்கூடிய தொழிற்சாலே, ஏற்றுமதி இறக்குமதி செய்யக்கூடிய நிறுவனம் அமைப்பதற்கும் அதிக லாபம் தரக்கூடிய ஆக்கபூர்வமான தொழில்கள் செய்வதற்கும் யாழ்ப்பாணத்தில் இடவசதி, முதலீடு செய்யக்கூடியவர்கள், வியாபாரத்தில்கலந்துகொண்டு முதலீடு செய்யக்கூடியவர்கள் உடனடியாகத் தேவை. விபரங்கட்கு விண்ணப்பிக்க: விளம்பர இல:3680 C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 3680

பெண் வெளிவேலேப் பணியாளர் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:- விளம்பர இல:3611, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 3611

கமிசன்அடிப்படையில் பீடி சுற்றித் தருவதற்கு ஒப்பந்தகாரர் தேவை. தொடர்பு கொள்ளவும். நிர்வாகி, ஆர். வி. ஜி. பீடிக்கம்பனி, 275.பீச் ரோட், யாழ்ப்பாணம். 3663

## விற்பனேக்கு

புதிய விலேயுயர்ந்த வரவேற்புக் கூடத்திற்கு உகந்த சோக்கேஸ், சோபா செற் விற்பனேக்குண்டு. 37, .பிரப்பன்குளம் லேன், வண்ணர் பண்ணே, யாழ்ப்பாணம். 3681

யாழ்ப்பாணம் — பலாலி வீதிக்கருகாமையில் ஊரெழு அம்மன் கோவில் சந்திக்கு தெற்குப் பக்கமாக 100 யார் தூரத்தில் 9 பரப்பு (இராசனின் தோட்டம்) காணி விற்பனேக்குண்டு. நேரில்தொடர்பு கொள்ளவும்: அப்புத்துரை, தபால் கந்தோர், நீர்வேலி. 3637

புனரமைக்கப்பெற்ற HONDA C/90, மொடல்கள் விற்பனேக்குண்டு. நா. சாம்பசிவம் அன் கோ, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 3654

## காணவில்லே

வேலணேக்கும் பண்ணேக்கும் இடையில் காரில் பயணம் செய்யும்போது, சூட்கேஸ் ஒன்று தவறிவிட்டது. இதற்குள் பாஸ்போர்ட், அடையாள அட்டை ஆகிய தஸ்தாவேஜுகள் உள்ளன. கண்டெடுத்தவர்கள், எனது விலாசத்துக்கு ஒப்படைத்தால் அல்லது தகவல் தந்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். துரைராசா முரளிதரன், வேலணே மேற்கு, வேலணே. 3686

25-6-82 வெள்ளி மாலே 'சுபாஸ் கபே' முன்பாக நவீன சந்தை விருந்தையில் எனது பாஸ்போர்ட், சாரதிலேசென்ஸ் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். எஸ். தனஞ்செயன், 550/5, கே. கே. எஸ். வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். 3688

## பின்னுறுதிக்கட்டளே அறிவித்தல்

யாழ்ப்பாண
மாவட்ட நீதிமன்றம்

கோப்பாய் என்னும் இடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இளேய தம்பி கந்தையாவினது மரணசாதனமற்ற விடயத்தில்

கந்தையா சிவபாலசுந்தரம், ''இரத்தினவில்லா'', பழந்தெரு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

மனுதார்

வழ. இல. 3644/தத்துவம்

எதிராக

1. கந்தையா மகேந்திரராசா.
2. கந்தையா தெய்வேந்திரராசா.
3. கந்தையா சுரேந்திரராசா மூவரும் ''இரத்தினவில்லா'., பழந்தெரு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
4. இளேயதம்பி இராசையா, ''இரத்தின வாசம்'', (பராயமற்ற 3-ம் எதிர்மனுதாரின் வழக்குப் பாதுகாவலர்)

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு பெயர் மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளே பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஆவணிமாதம் 27-ம் திகதி முற்பகல் 9-00மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளே ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றூர்.

1982-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளேப்படி
தா. குலஞானம்
பதிவாளர்

தயாரித்தவர்கள்:
பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்,
மனுதாரின் சட்டத்தரணிகள்.
(3560)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளே பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் பழைய பூங்கா வீதி இல. 25இல் வசித்த காலஞ்சென்ற சிவகுரு வைத்திலிங்கம் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்
செல்லேயா கோபாலசாமி இல. 25, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. 3588

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1981ம் ஆண்டு தை மாதம் 5ம் திகதி அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளே பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 5ம் திகதி.

நீதிமன்றக்கட்டளேப்படி,
தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
வ. முத்துக்குமாரசுவாமி,
மனுதாரின் சட்டத்தரணி.
3653

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

இலந்தைக்குளம் அணேச்சுவர், ஸ்ரான்லி ஒழுங்கைக்கும் பருத்தித்துறை 2-ம் குறுக்கு வீதிக்கும் டெக், பிராமணக்கட்டுக்குளத்தருகில் பொது மலசலகூடமும் சுற்றுமதிலும் ஆகிய அமைப்பு வேலேகளுக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலேகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணேயாளரால் 15-07-82 ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. இலந்தைக்குளம் அணேச்சுவர்.
02. அம்பலவாணர் வீதியிலிருந்து ஆரியகுளம் மட்டும் உள்ள வாய்க்கால் மேல் ஸ்ரான்லி ஒழுங்கைக்கும் பருத்தித்துறை 2ம் குறுக்கு வீதிக்கும் உள்ள டெக்கை உடைத்து புதிதாக டெக் அமைத்தல்.
03. பிராமணக்கட்டுக் குளத்தருகில் 14அறைகள் கொண்ட பொது மலசலகூடமும் சுற்று மதிலும் அமைத்தல்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 14-07-82 ம் திகதி புதன்கிழமை பி.ப.3-00 மணிவரை கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/-ப் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணேப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களே மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

சி.வீ கே.சிவஞானம்
மாநகர ஆணேயாளர்

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்.
25-06-82. 3684

## பின்னுறுதிக் கட்டளே

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்,

மரணசாதனமில்லாது மரணமெய்திய சாவகச்சேரி மட்டுவில் தெற்கு அம்பலவாணர் புவனசுந்தரராசா பெண் கனகம்மாவின் மரணசாதனமில்லாத மரணச்சொத்து விடயமாக.

மரணமெய்தியவர்
அம்பலவாணர் புவனசுந்தரராசா, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

மனுதார்

வழ. இல: 207 / தத்துவம்

எதிர்.

பராயமடையாத

(1) புவனசுந்தரராசா தேவதாஸ் மே/பா, கந்தையா பாலசிங்கம் பெண் அபிராமி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(2) புவனசுந்தரராசா மகள் பிரமிளா
(3) புவனசுந்தரராசா தவதாஸ்
(4 புவனசுந்தரராசா மோகனதாஸ் யாவரும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

தங்களது வழக்குப்பாதுகாவலர்:

(5) அப்பா அம்பலவாணர், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
(6) திரு. பாலசிங்கம்
(7) பெண் அபிராமி பாலசிங்கம் இருவரும் மருதங்குளம், மட்டுவில் தெற்கு சாவகச்சேரி.

எதிர்வாதிகள்

மேற்கூறிய விடயம் 1982ம் ஆண்டு வைகாசி மாதம் 21ந் திகதியன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு. முகமட் ஹுசைன் காரியப்பர் முன் விண்ணப்பகாரன் சமுகத்தில் சட்டத்தரணி திருமதி. நளினி கணேஷயோகன் சமுகமளித்து விண்ணப்பகாரனின் மனுவும் சத்தியக்கூற்றும் வாசித்த பின்,

இவ்வழக்கில் இறந்தவரின் ஆதனங்களுக்கும் ஆஸ்திகளுக்கும் பரிபாலன அதிகார தத்துவம் மனுதாருக்கு வழங்கப்படவேண்டுமென்றும், பராயமற்ற 1 தொடக்கம் 4ம் பிரதிவாதிகளுக்கு பராமரிப்புக்காரனுக 5ம் பிரதிவாதி நியமிக்கப்படுகிறூர் என்றும், 2ம், 3ம், 4ம் பராயமற்ற எதிர்வாதிகளே 5ம் எதிர்வாதியும், 1ம் பராயமற்ற எதிர்வாதியை 7ம் எதிர்வாதியும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 30ந் திகதியன்று மு. ப. 9.30 மணிக்கு மன்றில் தெரிவுபடுத்தவேண்டும் என்றும், அக்கறையுள்ள ஆளெவரும் மன்றின் முன் தோன்றி பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளே ஏன் முற்றுனதாக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டவேண்டுமென இத்தால் கட்டளேயிடப்படுகின்றது.

மன்றின் கட்டளேப்படி
தயாரித்தவர்,
ஒப்: ந. கணேஷயோகன்
மனுதாரின் சட்டத்தரணி.

ஒப்: எம். எச். காரியப்பர்
16-6-82
மாவட்ட நீதிபதி
(3673)


## பயிற்சி நெறி வகுப்புக்கள்

(கரவெட்டி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள பகுதி நேரத் தொழில் நுட்பப் பிரிவில் நடத்தப்படும் பயிற்சி நெறிகளுக்கான புதிய வகுப்புக்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் இயந்திரவியல், கட்டிடங்களுக்கு மின்னிணேப்புச் செய்தல் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாவது ஆண்டு நினேவாஞ்சலி



கந்தையா கனகரத்தினம்
தோற்றம்: 19-10-39
மறைவு: 21-6-80
பிறப்பிடம்:
வட்டுக்கோட்டை
சங்கரத்தை
வசிப்பிடம்:
மண்டைதீவு

என்னே ஏழையாய் அனுதையாய் தனிமரமாய் தவிக்கவிட்டு நீங்காத பொக்கிஷமாய் நெஞ்சில் ஓர் ஆலயமாய் நிலே கொண்ட என் அன்புள்ளமே!

உன்கதையும் என் கதையும் ஒரே கதை யல்லவா

உடலே பிரித்துவிட்டாய் உயிரைப் பிழைக்கவிட்டாய் தொடர்பை அறுத்துவிட்டாய் துயரைக் கொடுத்துவிட்டாய் இறைவா! பாவியென்னே மறுபடியும் பிறக்க வைக்காதே. என் அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனே வேண்டுகிறேன்.

உங்கள் பிரிவால்
வருந்தும்
அன்பு மனேவி
வட்டார இல. 6,
மண்டைதீவு.
(3642)




### கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு:

# பிரதேச சபைத் தலைவராக பாஸ்கரன் தெரிவு

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவின் பிரதேச சபைத் தலைவராக கரவெட்டி வடக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. என். பாஸ்கரன தெரிவு செய்யப்படவுள்ளார்.

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைத் தலைவர்களின் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 14 கிராமோதய சபைத் தலைவர்களில், 12 கிராமோதய சபைத் தலைவர்கள் சமுகமளித்திருந்தனர். இவர்களில் கரவெட்டி மேற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு மணிசுந்தரம் பிரதேச சபைத் தலைவர் தெரிவுப் போட்டியில் இருந்து தான் வாபஸ் பெறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து கரவெட்டி வடக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. பாஸ்கரனை பிரதேச சபைத் தலைவராகத் தெரிவுசெய்வது என்று முடிவுசெய்யப்பட்டது.

இன்று திங்கட்கிழமை மாலை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ள பிரதேச சபைத் தேர்தலில் திரு. பாஸ்கரனின் பெயரை உடுப்பிட்டி கிராமோதய சபைத் தலைவர் திரு. பொ. வேலுப்பிள்ளை முன்மொழிவதுஎன்றும், கரவெட்டி கிழக்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. எம். வேலுப்பிள்ளை வழிமொழிவது என்றும் கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.

உடுப்பிட்டி எம். பி யின் ஆலோசனையின் பேரிலேயே இம்முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

# பிடிவிருந்து ரத்து; விசாரணை ஒத்திவைப்பு

[மாவிட்டபுரம்]

நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்காமையால் நயினதீவு நாகபூஷணி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் நால்வர் மீதும், சிவஸ்ரீ, சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் மீதும் பிறப்பிக்கப்பட்ட பிடிவிருந்து ரத்துச் செய்யப்பட்டு வழக்கு விசாரணை அடுத்த மாதம் 8ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் சமுகமளிக்கத் தவறியதால் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு ரி.கே.என். திலகன் மேற்படி ஐவர் மீதும் பிடிவிருந்து பிறப்பித்திருந்தார். இதனையடுத்து சட்டத்தரணி செ கோடீஸ்வரன்மேற்படி தர்மகர்த்தாக்களையும், சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களையும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவர்கள் சார்பில் விளக்கமளித்தார்.

இதயனையடுத்து நீதிபதி அவர்கள் மீதான பிடிவிருந்தை ரத்துச் செய்து விசாரணையை ஜூலை 8ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சட்டத்தரணி செ. கோடீஸ்வரனுடன் திருமதி இளங்கோ திரு. வ. ஸ்ரீகாந்தா ஆகியோரும் ஆஜராகினர்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணிகள் என் பத்மநாதன், எஸ். கே மகேந்திரன் ஆகியோர் ஆஜராகினர். (அ

# இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்ய சோவியத் யூனியன் தயார்!

## ஜனதிபதி பிரஷ்நேவ் அறிவிப்பு

நியுயோர்க் ஜூன் 27

'அணுவாயுதங்களின் எல்லையற்ற உற்பத்திகளைத் தடுத்து நிறுத்துவதும் சர்வதேச உறவுகளை அபிவிருத்தி செய்வதை உத்தரவாதப்படுத்தி அணுவாயுதப் பேரழிவைத் தடுப்பதுவே இன்றைய முக்கிய தேவை'' என்று ஐ. நா. பொதுச்சபையின் ஆயுதப் பரிகரணம் குறித்த இரண்டாவது விசேஷ கூட்டத்துக்கு சோவியத் ஜனதிபதி லியோனிட் பிரெஷ்நேவ் அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜனதிபதி பிரெஷ்நேவின் செய்தியை சோவியத் வெளிவிவகார அமைச்சர் அண்ட்று குரோமிகோ பொதுச் சபைக்கூட்டத்தில் வாசித்தார்.

''சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் தலையாய அம்சம் சமாதானம் பற்றியதே. ஒரு அணுவாயுதத்தைத் தவிர்ப்பதற்கும் சமாதானத்தைப் பாதுகாப்பதற்குமான அவசியம் குறித்து நாடுகளுக்கிடையிலோ சமூக அமைப்புக்களுக்கிடையிலோ வாழ்க்கை முறை அல்லது சித்தாந்தங்களுக்கிடையிலோ கருத்து வேறுபாடு கிடையாது. இன்று இந்த உயர் லட்சியத்தை அடைய முன்னரைக் காட்டிலும் எல்லா நாடுகளினதும் ஒன்றிணைந்த நடவடிக்கை அவசியமாகியுள்ளது'' என்று பிரெஷ்நேவ் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''அணுவாயுத பேரழிவின் அச்சுறுத்தலிலிருந்து மக்களைப் பாதுகாக்க மனிதகுல வாழ்விலிருந்து அணுவாயுத பயன்பாட்டின் சகல சாத்தியங்களையும் அகற்ற சோவியத் யூனியன் தன்னலானதனைத்தையும் செய்யத் தயாராக இருக்கிறது. அதற்காக அணுவாயுதங்களை முதன்முதலில் பயன்படுத்த மாட்டாது என்ற உறுதியை சோவியத் யூனியன் பிரகடனப் படுத்துகிறது. ஐ. நா. வின் பொதுச்சபை மேடையில் இதை அறிவித்த இக் கணத்திலிருந்து இந்த உறுதி அமுலுக்கு வருகிறது. பூமியிலிருந்து இரசாயன ஆயுதங்களை அகற்ற சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படடல் வேண்டும் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். இந்த ரசாயன ஆயுதங்களை முற்றாகத் தடைசெய்யும் இப்போது கையிருப்பில் உள்ளவற்றை அழித்து விடவும் சோவியத் யூனியன் தயாராகவுள்ளது.'' என்றும் சோவியத் ஜனதிபதி தெரிவித்துள்ளார்.

# ''இந்து சமய மகத்துவம்''

(மாவிட்டபுரம்)

''எந்த மதத்திலும் இல்லாத அமைதியும் பக்தியும் ஆன்ம ஈடேற்றமும் இந்து சமயத்திலேயே உண்டென நம்பி வெளிநாட்டவர்கள் கூட எமது மதத்தைப்பற்றி ஆராய்ந்து அதனைப் பின்பற்ற தலைப்பட்டுள்ளனர். ஆகவே இந்நிலையில் எமது மதத்தை பேணுவதும் ஆலயங்களைப் பரிபாலிப்பதும் மிகவும் அவசியமாகின்றது.

இவ்வாறு மாவிட்டபுரம் பழை தலையிட்டி ஞான வைரவர் ஆலயத்தில் கும்பாபிஷேக கிரியைகளை ஆரம்பித்து வைத்துப் பேசிய வேத ஆகம வித்பன்னர் பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரிகள் கூறினர்.

# ''ஒன்றிணைந்த திட்டம் அமுலாக வேண்டும்''

## உடுப்பிட்டி எம். பி. யோசனை

(கரவெட்டி)

''ஒரு நாட்டின் அபிவிருத்தி அடிமட்டத்திலிருந்து திட்டமிடப்பட்டு செயற்படுத்தப் படவேண்டும் அப்பொழுதே கூடுதலான பலனை எதிர்பார்க்க முடியும். இதனையே மகாத்மா காந்தியும் வலியுறுத்திக் கூறியுள்ளார்''

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராமோதய சபைத் தலைவர்களுக்கான ஆலோசனைக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி எம். பி. மேலும் பேசுகையில்: ''கிராமோதய சபைகள் பொருளாதார அபிவிருத்தி, வளர்ந்தோர் கல்வி வசதி, இயற்கை வளத்தைப் பயன்படுத்தும் தனிப்பட்ட திட்டங்கள் போன்ற ஒன்றிணைந்த சிறந்த திட்டங்களைத் தீட்டவேண்டும், இதற்கு உப குழுக்களைத் தெரிவுசெய்து செயற்படுத்தவேண்டியது அவசியம்''என்றார்.

'ஒவ்வொரு கிராமப் பகுதியிலும் எந்தத்துறைக்கு கூடிய கவனம் செலுத்தவேண்டுமோ அந்தத்துறைக்கு வேண்டிய திட்டங்களைத் திட்டமிட்ட முறையில் தயாரித்துகாலவரையோடு சமூக நலன்களைப்பேணி ஒற்றுமை அடிப்படையில் இயங்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

# ஆப்கான்-பாக். பேச்சு

ஜெனிவா, ஜுன் 27

ஜெனிவாவில் ஆரம்பமான ஆப்கனிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கு இடையிலான வெளிநாட்டமைச்சர் மட்ட பேச்சுவார்த்தைகளில் ஐ.நா. பொதுச் செயலாளரின் தனிப்பட்ட பிரதிநிதியான தியாகோ வொர்டோல்ஸ் கலந்துகொண்டார். இரு நாடுகளுக்கிமிடையிலான உறவுகளை அபிவிருத்தி செய்வதில் இரண்டு ஆண்டுளுக்கு முன்னர் ஆப்கால் வெளியிட்ட பொதுவான கருத்துக்களையே இப் பேச்சுவபர்த்தைகளின் போது ஆப்கான் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

பாகிஸ்தானுடனும் ஈரானுடனும் இருபக்கப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் முகமாக ஒரு அரசியல் தீர்வுக்கான திட்டத்தை 1980 ல் ஆப்கான் அரசு வெளியிட்டது அண்டை நாடுகளுடனான உறவுகளை சுமூகப்படுத்துவதில் உள்ள தடைகளை அகற்றுவதும் ஒரு நாட்டின் உள்விவகாரத்தில் இன்னொர் நாடு தலையிடா திருப்பது அண்டை அயல் நல்லுறவு பரஸ்பர அனுகூலமிக்க ஒத்துழைப்பு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த உறவுகளை அபிவிருத்தி செய்வதுமே இதன் நோக்கம் என்று ஆப்கான் அரசாங்கப் பேச்சாளர் கூறினர்.

# 2வது டெஸ்ட் இங்: 425 இந்தியா: 35.3

லண்டன், ஜூன் 26

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கட் டெஸ்டின் 3வது நாளான இன்று இங்கிலாந்து கோஷ்டி முதல் இன்னிங்ஸில் 425 ஓட்டங்களைப் பெற்றது. பலத்த மழை காரணமாக ஆட்டம் இன்றும் பாதிக்கப்பட்டது.

ஆட்டநேர இறுதியில் இந்தியா 3 விக்கட்டுக்களை இழந்து 35 ஓட்டங்களைப் பெற்றது.

T. V. ஏரியல் அமைப்பில்
முதன்மைமிக்க ஸ்தாபனம்
சென்னை, ரூபவாகினி நிகழ்ச்சிகளை
T V யில் சிரமமின்றி பார்க்க
உத்தரவாதத்துடன் ஏரியல் அமைத்துத் தருவோம்.
நொடிப்பொழுதில், T V ஏரியல்
கோளாறுகளை சரி செய்யலாம்.
எமது பராமரிப்பு சேவை
24 மணி நேரம் செயல்படுகின்றது
சுபநிகழ்ச்சிகளை வீடியோ படக்காட்சியில்
எடுப்பதற்கு
குறைந்த கட்டணம்
பல்வேறு TV செட்டுகளை
பினன்ஸ் வசதியுடன் பெறலாம்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
ஸ்ரீதர் தியேட்டர் முன்,
யாழ்ப்பாணம்.

உங்கள் வீட்டிற்குத் தேவையான
பாவனைப்பொருட்களை
தவணைமுறையில்
சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம்.
★ தொலைக்காட்சி (T. V.) பெட்டிகள்
★ மின் விசிறிகள்
★ நீர் இறைக்கும் இயந்திரங்கள்
★ துவிச்சக்கர வண்டிகள்
மற்றும் உங்களுக்குத் தேவையான பொருட்கள்!
மங்கள வைபவங்கள்
வீடியோ படப்பிடிப்புச் செய்துகொடுக்கப்படும்
தொடர்புகொள்ளவும்:
முகாமையாளர்
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்;
TFC
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7680

### மணிவாக்கு

"துக்கத்தின் எல்லையை அடைந்து விட்டவனுக்கு, எல்லாவித எதிரிகளிடமிருந்தும் விடுதலை பெற்றவனுக்கு, சகல பிணைப்புக்களையும் அறுத்துக் கொண்டவனுக்கு ஆசைகளை ஒழிக்கவேண்டும் என்ற நிலை ஒருபோதும் ஏற்படாது."

— தர்மபதம்

# நமது நோக்கு

## சேர்பொன்னம்பலம்காலமும் இன்றைய நிலையும்

நாட்டின் துரித அபிவிருத்தியில் தீவிர அக்கறை கொண்டுள்ள ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் இதற்கு இனஒற்றுமையும் சமூக சௌஜன்யமும் நாட்டில் நிலைத்து நீடிக்கவேண்டுமென பதை அதிக அக்கறையுடன் வலியுறுத்தி வருகின்றார்.

சேர். பொன்னம்பலம் இராமநாதன்போன்ற தேசபக்தர்களை முன்மாதிரியாகக் கொண்டு நாட்டு மக்கள் இன ஒற்றுமையோடும், சௌஜன்யத்தோடும் வாழவேண்டும் என்று ஜனாதிபதி அவர்கள் அண்மையில் கொழும்பு இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் வித்தியாலய மாணவ மாணவியர் மத்தியில் பேசுகையில் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

சேர். பொன். இராமநாதன் போன்றவர்கள் இன, மொழி, மதமாச்சரியங்களுக்கு அப்பால் நின்று நாட்டையும் நாட்டு மக்களையும் இரு கண்கள் போன்று நேசித்துப் பணி புரிந்தார்கள். அந்த மனப்பான்மையுடனேயே நாட்டு மக்களும் அத்தலைவர்களை மதித்தார்கள். மாண்பு செய்தார்கள்.

சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியம் என்றவாறெல்லா சிந்திக்கும் நிலைமை அன்றிருக்கவில்லை. சகலரும் இந்நாட்டு மக்கள் என்ற உணர்வும் ஒன்றாக நிற்பதின் மூலமே நாட்டின் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையும் நாட்டில் நிலை கொண்டிருந்த காலம் அது.

அதனால் அன்றே தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவர் சிங்களப் பெரும் தேசிய இனத்தின் தலைவர்களால் கொழும்பு மாநகரில் தேரில் வைதது இழுத்துச் சென்று கௌரவிக்கும் சந்தர்ப்பத்தை அந்நாளில் பெற முடிந்தது.

இன்றைய இலங்கையில் இப்படியான ஒரு காரியம் நடைபெறுவதைக் கற்பனையிலும் நினைத்துப்பார்க்க முடியாது.

அன்றைய தலைமுறையினரின் மனடபோக்குக்கும் இன்றைய தலைமுறையினரின் மனப்பான்மைக்கும் அணுவளவாகினும் ஒற்றுமையில்லை.

சுதந்திரம் கிடைக்குமுன் இருந்த அந்த இன ஒற்றுமையும், பரஸ்பர மதிப்பும், சௌஜன்யமும் இன்று எங்கே போய்விட்டன? இதற்குக் காரணம் தான் என்ன?

சுருக்கமாகபதில்கூறுவதானால் குறுகிய நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளும் அரசியல்கட்சிகளும் நாட்டுமக்களின் மனங்களில் வெறுப்பையும் துவேஷத்தையும் விதைத்துப் பயிராக்கி நாட்டை குட்டிச்சுவராக்கிவிட்டார்கள் என்பதே பொருந்தும்.

இந்த நிலைமையில் மீண்டும் பழையநிலைமையை உருவாக்க மாண்புமிகு ஜனாதிபதி போன்றவர்கள் பிரயத்தனம் எடுப்பது மகிழ்ச்சியளிக்கும் செய்தியே.

ஆனாலும் பழைய உதாரணங்கள் இன்றை நிலைக்குப் பொருந்துமா என்பதே நமது கவலை.

சிங்கள மக்களோடு சமமாகநின்று கையோடு கைசேர்த்து அந்நிய ஆட்சிக்கு எதிராகக்குரல் எழுப்பிய தமிழ்மக்கள் இன்று நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்காக சிங்கள மக்களோடு தோளோடு தோள்சேர்க்கும் நிலையில் இருக்கிறார்களா என்பது சோகம் நிறைந்த ஒரு கேள்வியாகும்.

வெளிப்படையாகச் சொல்வதானால் தமிழ் மக்கள் சுதந்திரத்திற்கு முன் அனுபவித்த உரிமைகள் பலவற்றையும் படிப்படியாக இழந்தது ஒருபுறமிருக்க தாம் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் பிரதேசங்களிலேயே பாதுகாப்புடன் வாழமுடியாது என்ற அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ளன.

இந்த நிலைமைகள் மாற முடியுமானால், அதற்கு ஜனாதிபதிபோன்ற தேசத் தலைவர்கள் உறுதியான அத்திவாரமிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பார்களானால், ஒருவேளை சேர் ராமநாதன் காலத்தைவிட சிறந்ததொரு இலங்கையை எதிர்காலசந்ததியினர் எதிர்பார்க்க முடியும்.

அதற்கு அரசியல் இடங்கொடுக்குமா என்பதே மீண்டும் பூதாகாரமாக எழுந்து நிற்கும் கேள்வி.


(அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமிகோவில் கொடி இன்று)

## முருகனை வணங்குவோமே

மயிலினை ஊர்தி ஆக்கி
மயிலியற் புலத்தில் வாழும்
நயமுறு முருகனாரின்
நல்லதாள் வணங்குவோர்க்குப்
பயமில்லைத் துன்பம் இல்லைப்
பாவங்கள் சேர்தல் இல்லை
உயர்வொன்றே வந்துசேரும்
உள்ளமோ புனிதமாகும்

- இளங்கோ

# மொழியியலின் மைல்கல்



தமிழ் மொழியின் தகைமை சால் சிறப்பை தமிழினம் கருதிடாக் காலத்தில்—

"நும் மொழியின் சான்ற சிறப்பை தமிழ் மக்களே நீர் இனியே முழுவதூரம் உணர்மின்" என்ற வீர முரசு அறைந்து தமிழ் மக்களைத் தட்டி எழுப்பிய பெருமை ஒப்பியல் அகராதியின் ஒப்பற்றமேதை தவத்திரு ஞா. சி. தாவீது அடிகளாரைச் சாரும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவனின் வாக்குக்கு வரைவிலக்கணம் கலாநிதி தாவீது அடிகள். இவர் பருத்தித்துறையில் தும்பளையைச் சேர்ந்த மாவச்சை என்னும் கிராமத்திலே 1907-06-28ல் பிறந்தார்.

புகழாரம் பெற்றுக் கொடுத்த தமிழ் மகன் என்ற பெருமையைப் பெற்றார். இந்திய ஆரிய மொழிகளில் எம். ஏ. பட்டமும் தமிழ் மொழியில் பி. எச். டி (லண்டன்) பட்டமும் பெற்றும் எளிமையும் தாழ்மையும் நிறைந்தவர். சொற் பிறப்பு—ஒப்பியல் தமிழ்—சிங்கள அகராதியை இயற்றினால் தேசிய ஒருமைப்பாடு உருவாகும் என உணர்ந்து உழைத்த உத்தமர். 'தொல் திராவிடம்'' அன்றேல் சீரிய சிறந்த [தாமீழ] மொழியை விளக்கிச் சாதனை நிலை நாட்டிய பெருமகன். அது மட்டுமல்லாது சிங்களம் தமிழின் தங்கை என்று ஆதார பூர்வதுடன் நிரூபித்துக் காட்டிய முதல் அறிஞர். கி. மு. 100-ஆம் ஆண்டளவில் தோன்றிய கலித்தொகை, குறுந்தொகை போன்ற நூல்களில் வரும் "யாழ்" "யாழ்" என்ற சொற்கள் காதலன் காதலியை, தோழன், தோழியை அழைப்பதாக வருகின்றது என்றும் எனவே தமிழ் "யாழ்," "யாழ்" என்ற சொற்களில் இருந்து தான் சிங்கள யாழுவா பிறந்தது என்றும் இங்கனமே 4000 பதங்கள் சிங்களத்திற்கும், தமிழுக்கும் பொதுவானவை ... அறுதியிட்டு ஏற்றுக்காள்ளும் வண்ணம் ஆதா... எடுத்துக் காட்டியுள்ளார்.

**– துரை சென் றேச் –**

(பொதுச் செயலாளர், தாவீது அடிகள் தமிழ் மன்றம்)

கல்வித்துறையிலே தாவீது அடிகள் ஈட்டிய சாதனைகள் மதிப்பிட முடியாதவை. இந்த மாமேதைக்குக் கிடைத்த பட்டங்களோ மதிப்பிட முடியாதவை. வரலாற்றுத் துறையில் பி. ஏ சிறப்பு (லண்டன்) முதற் பிரிவிற் சித்தியடைந்தார். அத்தோடு பொருளியல் அரசியலுக்குரிய தங்கப் பதக்கத்தை ஈட்டி ஈழ நாட்டிற்கே பெற்றார். அது மட்டுமல்ல, 33 மொழிகளில் பாண்டித்தியமுடைய மாமேதை இவர்.

தாவீது அடிகளுக்கு இதயம் தமிழ்ப்பித்து; மொழிப்பித்து; புத்தகப்பித்து; அவரது விடாய் அறிவு விடாய்; ஆவல எழுதும் ஆவல்; படித்தல், படிப்பித்தல், எழுதுதல். மேதை தாவீதடிகளார் 33 மொழிகளில் பாண்டித்தியம்

சென்னையகராதியிலுள்ள பிழைகளை தக்க ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டிய ஒரேயொரு தமிழறிஞர் தாவீதடிகளேயாவர். கலாநிதி தாவீது அடிகள் சொற் பிறப்பு ஒப்பியல் துறையிலே ஒரு மைல் கல்.

# கல்லூரிக் கட்டிடத்துக்கு பணச்சடங்கு

(நேற்றைய தொடர்ச்சி)

சைவபரிபாலனசபையார் இப்பள்ளிக்கூடத்தின் குறைவேலைகளைமுடிக்கிறதற்காகவும் அதற்குப் போதிய முதற் பொருள் சேர்க்கிறதற்காகவும் இந்த செப்டம்பர் மாதம் கசஉ சனிக்கிழமை முதல் எட்டு நாளைக்குப் பணச்சடங்கொன்று செய்ய எண்ணியிருக்கிறார்கள் அப்போது சபைத்தலைவர் ஸ்ரீ பொ. குமாரசுவாமி முதலியவர்களும் வர உடன்பட்டிருக்கிறார்கள். விபூதி பூசுகின்றவர்கள் குடும்பத்துக்கு ஒரு ரூபா விகிதம் கொடுத்தாலும் தொகை பெரிதாய்விடும். சபையாருடைய கருத்து சைவர்களனைவரும் தங்கள் தகுதிக்குத்தக்கபடி ஒரு ரூபா முதற் கொண்டு மேலே எவ்வளவு கொடுத்தாலும் மனப் பூர்த்தியாய் வாங்கவேண்டுமென்பது சில டணச்சடங்குகளில் தொகையை அதிகமாகக்கேட்கிறதினால் அநேகர் அந்த இடத்துக்கும் வராமல் விட்டுவிடுகின்றார்கள். இது அப்படியன்று, எனக்கென்று ஒருவரும் கேட்கவில்லை.

நஞ்சமயத்தில் அபிமானமுடையவர் அங்கங்கே பலரிருக்கிறார்கள் பணச்சடங்கு டள்ளிக்கூடத்திற் செய்யப்படினும் தேசாந்தரங்களிலுள்ளவர்கள் இயன்ற பொருள் அனுப்பி வைக்கலாம். உதவுகிறவர்களுடைய பெயர் பத்திரிகையில் வரும்.

ஹைஸ்கூல்'' என்னும் பள்ளிக்கூடத்தைத் தொடங்கி அதற்காக மிக அவசியமான கட்டடத்தில் சென்ற வெள்ளிக்கிழமை பிரவேசஞ் செய்தாயிற்று.

இப்பள்ளிக்கூடத்தின் கட்டடக் குறைகளை முடிக்கிறதற்காக்வும், போதிய முதற் பொருள் சேர்க்கிறதற்காகவும் இங்கிலிசுக்கு வருகிற புரட்டாதி மீ உஅ டி சனிக்கிழமையிரவு ஏழு மணி தொடங்கி எட்டுமணிக்குமேற்படி பள்ளிக்கூடத்தில் பணச்சடங்கொன்று செய்ய எண்ணியிருக்கின்றோம். இதற்கு இச்சபைத்தலைவர் ஸ்ரீ குமாரசாமி முதலியாரவர்களும் கொழும்பிலிருந்து வருகிறதாக எழுதியிருக்கிறார்கள். அதற்குவந்து உங்களாலியன்ற பொருளுதவி செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**ச. அம்பிகைபாகன்**

### பணச்சடங்கு விளம்பரம்

பணச்சடங்கு விளம்பரத்தில் சில முக்கிய விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதனையும் இங்கு தருகின்றேன்.

### இந்து ஹைஸ்கூல்

தற்காலத்தில ஒருவன் இங்கிலிசு பாஷையை மாத்திரங் கற்றுக்கொண்டால் அவன் மற்றெல்லாப்பாஷைகளையுங் கற்கிறது மிக இலகுவாயிருக்கிறது அன்றியும் இங்கிலிசு அரசபாஷையாதலால் பொருளை விரும்பிய எல்லாராலும் அது விரும்பிக்கற்கபடுவதாயுமிருக்கின்றது.

இந்த இங்கிலிசுப்பாஷையை நமது சமயத்துக்கும் சாதியாசாரத்துக்கும் விரோதமில்லாமல் இத்தேசத்தில் கற்பது நமக்கு முடியாதநொன்றாயிருந்தது. இக்குறையை நிறைவேற்றுதற்காக சைவபரிபாலன சபையார் "இந்து

யாழ்ப்பாணம்]
ச அ கஷ ஷூ]
ஆவணி மீ உ சா உ]

இங்ஙனம்
சி. நாகலிங்கம்
உப அக்கிராசனர்
வி. காசிப்பிள்ளை
இலேககர்
த. கைலாசபிள்ளை
உப இலேகர்

(5ம் பக்கம் பார்க்க)

### இன்று

## தோப்புக்காடு முருகனுக்கு சங்காபிஷேகம்

ஈழவளநாட்டின் வடபாலமைந்த பிரசித்திபெற்ற தீவுகளில் ஒன்றுதான் காரைதீவு ஆனால் இத்தீவு இப்போதைய வழக்கில் காரைநகர் என அழைக்கப்படுகின்றன. காரைநகரின் தென்திசையில் கீர்த்திமிக்கோங்கும் கிராமமான தோப்புக்காட்டில் ஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் கோயில் கொண்டருளியுள்ளார்.

இவ்வூரில் பலவகை இசைக் கருவிகளை இயக்க வல்லவர்களும், ஞானமிக்க சங்கீத, கலைஞர்களும், நடனம், நாடகம், நாட்டுக்கூத்து ஆகியவற்றில் துறைபோகியவர்களும், ஓவியர்களும், இயற்றமிழ்ப் புலவர்களும், கப்பல்கட்டும் திறன் படைத்தோரும் ஒன்று கூடி வாழ்ந்து வருகின்றனர் என ஈழத்துச் சிவபுராணம் கூறுகின்றது.

'கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்ற ஔவை மூதாட்டியின் கூற்றுக்கு ஏற்றால்போல் பண்டை நாளில் இவ்வூரில் வசித்தவர்களுக்குக் கோவில் இல்லாக் குறை பெருங்குறையாக வாட்டியது. இப்பக்தர்களின் குறையை அகற்றக் குமரப் பெருமான் ஆவல்கொண்டான் முருகனின் கருணையினால் இற்

(5-ம் பக்கம் பார்க்க)

## றமழான் சிந்தனை

"ஸஹர் செய்து கொள்ளுங்கள். ஏனெனில், ஸஹர் செய்வதில் பரகத் இருக்கிறது"

ஸஹர் முடிவு 4.23
நோன்புதிறக்கும் நேரம் 6.29

தொகுப்பு: சுல்பிக்கா—கௌது



# "ஈழத் தமிழருக்கு உதவிக்கரம் நீட்ட தாய்த்திருநாடு என்றும் தயார்!"

## திருக்குறள் மகாநாட்டில் தமிழக அறிஞர் சூளுரை

## "வள்ளுவம்" மதச்சார்பற்றது; எந்நாட்டவருக்கும் உரியது"

(நமது நல்லூர் நிருபர் க. தி. ரவீந்திரன்)

**"ஈழத்தமிழர்களுக்கு எந்த நேரத்தில், எந்த விதமான உதவி தேவைப் படுகிறதோ அதனை எப்பொழுதும் செய்வதற்கு தாய்த்திரு நாட்டு மக்கள் காத்திருக்கிறார்கள் என்ற உறுதிமொழியை உங்களுக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்"**

இவ்வாறு நேற்று முன் தினம் நடைபெற்ற தமிழ் மறைக் கழகத்தின் இருபத்து இரண்டாவது மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றிய இந்திய அறிஞர் கலாநிதி க. த. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா.பொ. இரத்தினத்தின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலாநிதி க.த. திருநாவுக்கரசு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

### சென்னை திருக்குறள் கழகம்

"இந்த மகாநாட்டில் கலந்து கொள்கின்றபோது எனக்குஅளவற்றமகிழ்ச்சி ஏற்படுகிறது. தங்கங்கள் நாட்டில் பல திருக்குறள் மன்றங்களும் கழகங்களும் ஏற்படுத்தப்பட்டன புதுக்கோட்டையில் உள்ள கழகம் 30 ஆண்டுகளுக்கு மேலாக உலகெல்லாம் திருக்குறளைப்பரப்புகின்றது என்று சொல்லலாம். ஆனல் சென்னையில் தோற்றுவித்த திருக்குறள் மன்றங்கள் செம்மையாக முழுமையாக செயற்பட வில்லை. சில அறிஞர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வெளியூர் சென்றதனுல் சிறப்பாக பணியாற்ற முடியவில்லை. சென்னையில் பேராசிரியர் அன்பழகனர் நேரடியாக அரசியல் ஈடுபட்டதனுல் திருக்குறள் கழகம் சிறப்பற்றுப் போய் விட்டது. இதேவேளை இங்குள்ள அமைப்பை காணுகின்றபோது மகிழ்ச்சி அடைகிறேன். 'தமிழ்' பற்றி நமக்கெல்லாம் தெரியும். நம் தாய் மொழி தமிழ் நம்மை பிணைப்பதும் இணைப்பதும் தமிழ் மொழிதான்.

"மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து இன்று வரை உலகில் 21 நாகரீகங்கள் உருவாகின. இவற்றிலே மூன்று நாகரீகங்களை ஜப்பிய, சீன, அமரிக்க நாகரீகங்கள் இந்த மூன்று நாகரீகங்களையும் விட்டு ஏனைய பத்தொன்பது நாகரீகங்களும் பழங்குடிமக்களால் அழித்து ஒழிக்கப்பட்டுவிட்டன. இரண்டு நாகரீகங்கள் மட்டும் புத்துயிரோடு மூச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்று சீனநாகரீகம் மற்றது தமிழ் நாகரீகம் இத்தகைய தமிழர் தம் நாகரீகத்தை பண்பாட்டை கட்டிக்காத்து வருங் கால சந்ததியினருக்கு வழியமைக்க வேண்டும்.

### சோவியத் மொழிபெயர்ப்பு

"திருக்குறளைப்பற்றி வெளிநாட்டு அறிஞர்கள் பலர் அறிந்து இருக்கிறார்கள். 10 ஆண்டுகளுக்கு முன்னர் பேரறிஞர் கிலோ ஸே ஷிா வும் சோவியத் தமிழ் நாட்டறிஞர் கிருஷ்ணமூர்த்தியும் மார்க்சிய சொல்லாடலை எடுத்துக்காட்டிய போதும் 1974-ல் ருஷியா திருக்குறளை மொழிபெயர்த்துள்ளதும் பெருமைக் குரியவை ருஷயர்களுடைய மொழி பெயர்ப்பிலே சிறப்பு என்னவென்றால் ஒன்று பாட்டிலே மொழி பெயர்த்திருக்கிறார்கள் மற்றது ஒவ்வொரு குறளுக்கும் கிவ்வொரு படம் வரைந்திருக் கிறார்கள்.

"இங்கு உரையாற்றிய சிலர் வள்ளுவர் ஊழ்வினையை நம்பினாரா? என்று விவாதித்தார்கள். ருஷிய மொழியில் அறிஞர் ... நாயூவால் மொழிபெயர்க்கப்பட்ட குறளில் 13 2 அதிகாரங்கள் தான் உள்ளன. இவர்கள் ... மென்ற 38 ம் அதிகாரத்தை நீக்கிவிட்டார்கள் ... ருஷிய அறிஞர்களோடு தொடர்பு கொண்டபோது நீங்கள் திருக்குறளில் ஊறித்திளைத்தவர்கள் எமது செய்கையில் உங்கள் உள்ளம் பதைபதைக்கும் ஆனாலும் எமது அரசியற் சித்தாந்த பொருளாதார கொள்கைக்கு தீங்கு வரும் என்பதால் நீக்கிவிட்டோம் என்றார்கள். ஊழ்வினையை நீக்கி பன்னிரண்டு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள் தமிழ் மறை எப்படி எல்லாம் கையாளப்பட்டிருக்கிறது என்று உணரவேண்டும். இந்த நாலுக்கு இந்திய பாண்பாட்டு அறிஞர் முகவுரை எழுதுகன்றார். வள்ளுவர் குருநிலையில் இருந்து இதைச்சொல்லவில்லை தீர்க்க தரிசியாக இருந்தும் இதைச்சொல்லவில்லை. நல்வாழ்வை விரும்புகின்ற நண்பனாக- தோழனாக நின்று சொல்லுகின்றார்' என்று எழுதுகின்றார்.

### காயம் வள்ளுவம்

"திருக்குறள் தமிழ் இனத்திற்கு இன எழுச்சியை, தேசிய உணர்வை ஊட்டுகின்றது.

"காந்தியடிகளின் கொள்கையைக் காந்தியம் என்பது போல, நாமும் மக்களுக்கான நெறி என்று பேர் கொடுக்க சிந்தித்தால் 'வள்ளுவம்' தமிழ் மறை தவிர வேறு வழியில்லை. பாரதியார் பாடலில்கூட 'கூட்டத்தில் கூடிநின்று' என்று வெற்றுப் பேச்சை-சாடுவதைப் போல, வெறும் பேச்சால், பயனில்லை வள்ளுவத்தை நாம் கடைப்பிடிக்க வேண்டும், அதற்கு நாம் வள்ளுவத்தை உணர—அறிய வேண்டும். 'ஓதி உணர்ந்தும்' என்ற குறளில் அவர் தெளிவாக உணர்த்துகின்றார். நாம் குறள் நெறியை பின் பற்றுகின்றோமா? வாழ்க்கை நெறியை இளம் குழந்தைகள் மனதில் பதிய வைக்க வேண்டும். அதற்கு இத்தகைய மாநாடுகள் வழியமைக்கும்.

'திருக்குறளின் மற்றச் சிறப்பு. வாழ்க்கை வாழ்வதற்கே என்கின்ற தத்துவம். வளமாக, சிறப்பாக வாழ பல இடங்களிலே கோடிட்டுச் சொல்லுகின்றார். வாழ்க்கை நிலையாமையை சொன்னாலும் நான் எனது என்ற நிலையை உணர்த்தக் கூடாது என்பதற்காக நிலையாமை முறையோடு வாழ்ந்தால் இந்த மண்ணுலகத்திலேயே விண்ணுலகத்தைக் காணமுடியும் என்றார். இந்த மறை திருவள்ளுவர் என்றும் தமிழ் வள்ளுவனின் வாயில் இருந்து உதிர்ந்த முத்து அது மட்டுமல்ல மனிதனை மனிதனாக வாழவைக்க தொண்டு நெறி- சேவைபற்றி சாதி, சமய வேறுபாடுகளிலிருந்து மாறுபட்டு, துன்பப்படுபவர்களுக்காக துன்பம் துடைக்கப் பாடுகிறார். உலகிலேயே நான் அறிந்தவரையில் இரண்டே இரண்டுபேர் தான் பெண்களை பற்றி பேசுவதோடு, பெண்களுக்கு மட்டும்மல்ல கற்பு என்று சொன்னவர்கள் ஒன்று இராமாயணம்: மற்றது திருக்குறள். திருக்குறளை முழுமையாகபடித்து பார்க்கின்றபோது ஆண்களைவிட பெண்கள் சிறந்தவர்கள் என்று காட்டப்படுகிறது. திருக்குறளில் அறத்துப்பாலில் 'துணை நலம்' என்ற அதிகாரத்தில் "பெண்ணின் பெருந்தக்க யாவுள?" என்ற வினை வெழுப்புகின்றான் திருக்குறளை முழுமையாக பார்த்தால் இரு இடங்களிலே பதில் சொல்லியிருக்கின்றான்.

பொருட்பாலில் "பெண்ணே பெருமையுடைத்து" என்கிறார். ஆண்களில் சிலர் பெண் டாட்டிதாசர்களாக இருக்கிறார்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

## தோப்புக்காடு...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்கு முன் முருகபக்தரான ஒருவரின் கண்ணில் 'கருங்கடல் வேலாயுதனின்' கைவேல் கப்பலில் காட்சிதரக் கண்டார். உடனே அவர் அதைவிட்டுப்பிரிய மனமில்லாதவராய் தோப்பூருக்கே கொண்டுவந்து சேர்த்துச் சிறு குடில் அமைத்து, அப்போது அவ்வூரிலிருந்து கதிர்காமக் கந்தனிடம் வருடந்தோறும் சென்றுவரும் முருக பக்தர் ஒருவரைக் கொண்டு வேலவனுக்குப் பூஜைசெய்துவந்தார்.

இப்பொழுது பெரியகோவில் அமைந்த காணியையும் இப்பக்தரே தர்மசாதனம் செய்தார். இப்போதும் முருகன் 'கைவேல்' இக்கோவிலில் காட்சிதரும். இப்பக்தரைத் தொடர்ந்து இவரின் வம்சாவழியினரே நித்திய பூஜை, கந்தபுராணப்படலம், திருவெம்பாவைத் திருவிழாவும், அறுபத்துமூன்று நாயன்மார் குருபூஜையும் நடத்திவந்தனர். ஊரவர் உதவியினுல் கோவில் பன்மடங்கு பெருத்துச் சங்கம் அமைத்து பூசை வழிபாடுகள் உற்சவங்கள் இன்தே நடைபெற்றுவருகின்றன.

ஆனி உத்திரத்தில் கிராம மக்கள் யாபேரும் சேர்ந்து மகேஸ்வர பூஜையுடன் திருவிழாவைச் சிறப்பாகச் செய்வார்கள். அத்துடன் முருகன் திருவுலாவரும் காட்சியும் இடம்பெறும். ஆனி உத்திரத்தில் மக்களுக்கு அருள்பாலிக்கத் திருவுலாவரவிருக்கிறான் இன்று சங்காபிஷேகம்பெறும் கருங்கடல் வேலாயுதன்.

செல்வி வீ. அன்பரசி
நுண்கலைப்பிரிவு
யாழ். பல்கலைக் கழகம்

## கல்லூரிக்...

[4ம் பக்கத் தொடர்ச்சி]

சைவ பரிபாலன சபையின் தலைவரான குமாரசாமி முதலியார் கொழும்பிலிருந்தபடியால் உப அக்கிராசரான அப்புக்காத்து நாகலிங்சம் விளம்பரத்துக் கையெழுத்திட்டார், இப்பணச்சடங்குக்கு குமாரசுவாமி முதலியாரை தமது குல தெய்வமான கொச்சிக்கடை பொன்னம்பலவாண சுவாமி பெயரில் ரூபாய் 1000ம் தமது பெயரில் ரூபாய் 1000ம் கொடுத்தார். அவரது மைத்துனர் முதலியார் இரத்தினசபாதியும் ரூபாய் 1000ம் கொடுத்தார். மற்றையவர்கள் ரூபாய் நூறு தொடக்கம் ஐம்பதுசதம்வரை கொடுத்தனர்.

### ஆங்கிலக் கல்வியின் அவசியம்

பணச்சடங்கு விளம்பரத்திலும் அதற்குமுன் எடுத்துக் காட்டப்பட்ட இந்துசாதன ஆசிரிய வசனத்திலும் ஆங்கில மொழிக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்தியிருப்பதை அன்பர் கவனித்திருப்பார்கள் ஏறக்குறை ஒரு நூற்றாண்டுக்குமுன்னரே ஆங்கிலமொழியைக் கற்கவேண்டிய அவசியத்தை நம்முன்னோர் நன்குணர்ந்திருந்தனர். அவ்வுணர்வுக்கு நம்மத்தியில் இப்பொழுது போதியனவில்லாதிருப்பது வருந்துதற்குரியது.

இன்னுமொரு முக்கிய விஷயத்தைக் கூறிவிட்டு இக்கட்டுரையை முடிக்கவிரும்புகிறேன் இன்னும் சில வாண்டுகளில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு வரப்போகிறது. அதற்கு முன்பாகவேனும் இக்கல்லூரியின் சரித்திரம் சேவ்வனே எழுதப்படுமென எதிர்பார்க்கிறேன்.

## மத்திய கிழக்கு வேலைவாய்ப்பு வட்டு எம். பி. ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு பெறுவதற்கு எம். பி. க்கள் தமது தொகுதிகளிலிருந்து 15 பேரை தெரிவு செய்து அனுப்பலாம் என்று அரசு அறிவித்ததற்கு இணங்க வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு தா. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத்தொகுதியிலுள்ள கூட்டணிக்கிளைகளை தலா ஒருவரை தெரிவு செய்து தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ளார். கூட்டணிக்கிளைகள் சிபார்சு செய்து அனுப்பும் பெயர்களையே தாம் மத்தியகிழக்கு வேலைவாய்ப்புக்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்கப் போவதாக திரு. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்.

(அ)

ஒரு முறை தவணைப் பணத்தை
செலுத்துங்கள்,
தங்க ஆபரணங்கள்
உங்கள்
உடமையாகும்! இன்று முதல்
மாதாந்தத் தவணைத் திட்டத்தில்
தங்கம் வாங்குங்கள்
உங்களுக்குத் தேவையான எல்லாப் பவுண் நகைகளையும் நியாயமான விலையில் வாங்கி மாதாந்தத் தவணை முறையில் பணத்தைச் செலுத்துங்கள்.
உங்கள் நம்பிக்கையான நகை வியாபாரிகளிடம் தேவையான ஆபரணங்களைத் தெரிவு செய்யுங்கள்.
ஒரு ஆரம்ப தவணைப் பணத்துடன் அந்தத் தங்க நகைகளை உங்களுடையதாக்க நாம் உதவி செய்வோம்.
கவர்ச்சிகரமான தவணைத்திட்டத்தின் விபரங்களை அறிய எம்மைக் காணுங்கள்.
TFC
தபினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# பயங்கரவாதத்தை ம. வி. முன்னணி எதிர்க்கிறது

(நேற்றைய தொடர்ச்சி)

பிளவுபடாத ஐக்கிய சோஷலிஸ இலங்கையில் நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் விடுதலை முன்னணி, வடக்கில் முதலாளித்துவ வர்க்க தமிழ்ஈழஇயக்கங்களுக்கும், அவர்கள் கைக்கொள்ளும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் அதேவேளையில் பயங்கரவாதம் பொதுவில் மக்கள் இயக்கத்துக்கு பாரதூரமான கேடுவிளைவிக்கும் ஒன்றெனக் கருதி அதனை நிராகரிக்கின்றது. சோஷலிஸ ஐக்கிய இலங்கையினுள் சகல பிரஜைகளும் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார, தேசிய சமஉரிமையுள்ள சகோதரர்களாக வாழமுடியும் என்பதை முன்னனுமானத்துடன் தெரிவிக்கும் மக்கள் விடுதலை முன்னணி, அவ்வாறான சோஷலிச இலங்கையை கட்டிக்காக்கும் என வாக்குறுதி அளிக்கின்றது.

## நிதிசேகரித்தல்

விலைமதிக்கமுடியாத அர்ப்பணிப்புக்களால் கட்டிவளர்க்கப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணி, தனக்குத் தேவையான நிதியை (பணத்தை), இரண்டு லட்சத்துக்கு அதிகமான தனது அங்கத்தவர்களிடமிருந்தும். இளைஞர் சங்கங்களில், மகளிர் சங்கங்களில் விவசாய சங்கங்களில், தொழிலாளர் சங்கங்களில், மாணவர் சங்கங்களில் உள்ள அங்கத்தவர்களிடமிருந்து, ஒன்றுசேர்க்கும் சந்தாப்பணத்தின் மூலமாகவும், உதவிநிதிகள், கட்சி ஆதரவாளர்களின் உதவியாளர்களின் நிதி உதவிகள் மூலமும், பொதுமக்களிடம் தொடர்ச்சியாக நிதி திரட்டுவதன் மூலமும் அதிகப்படுத்திக் கொள்கின்றது. தனக்கு தேவையான நிதிக்காக எந்தவோர் சந்தர்ப்பத்திலும், எந்த வடிவத்திலும் கொள்ளையிடுதல் முதலான சட்டத்துக்கு

முரணான மக்கள் துரோகச் செயல்களில் கட்சி ஈடுபடுவதில்லை என்பதுடன் அவ்வாறான நடைவடிக்கைகள் மக்கள் இயக்கங்களுக்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தமுடியும் என்பதையும் இலங்கையிலும், உலகிலும் வாழும் மக்களுக்கு உறுதியான விதத்தில் அறிக்கையிடுகின்றது. மக்கள் ஆதரவு கிடைக்காத ஒரு சில இரகசிய சூழ்ச்சிகரமான மக்கள் விரோத அமைப்புக்கள் மேற்கொள்ளும் கொள்ளை முதலான இழிவான மக்கள் துரோக நடவடிக்கைகளுக்கும் எமது கட்சிக் குமிடையில் முடிச்சுப் போடுவதற்கு எமது கட்சியின் எதிரிகள் எடுக்கும் சூழ்ச்சிகர செயல்களை தோல்வியடையச் செய்வதற்கு முன்வருமாறு நாம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

## யாருடையது?

யாழ். மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கண்மையில் யாழ் மெயின் வீதியைச் சேர்ந்த எல். ஜே. இராசநாயகம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட மூக்குக்கண்ணாடி ஒன்று ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# "72ல் வந்த தரப்படுத்தல் அநீதிஇன்னும்தொடர்கிறது".

## கூட்டணித் தலைவர் 'சிவா' கவலை

யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீடத்திற்கு இவ்வாண்டு கொழும்புமாவட்டத்திலுள்ள மாணவர்கள் 250 புள்ளிகளுடன் தெரிவாகியுள்ளனர். அதேவேளையில் யாழ். மாவட்டத்திலுள்ள மாணவர்களில் 270 புள்ளிகளுக்குமேல் பெற்றவர்களே தெரிவாகியுள்ளனர்.

இவ்வாறு நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையின் வைரவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார் தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் 1972-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் திட்டத்தினுல் மாணவ சமுதாயத்தின் உயர்கல்வியில் அநீதி இழைக்கப்பட்டது. அது இன்னமும் தொடர்கிறது. இத்தகைய திட்டங்களையும் மீறி தமிழ் மாணவ சமுதாயம் வளர்ச்சி அடைவதற்குக் கல்லூரிகளின் பங்களிப்பு மிகக்காத்திரமாய் இருக்கவேண்டு என்றூர்.

பாடசாலையின் விஸ்தரிப்பிற்காகக் காணி சுவீகரிக்கப்பட வேண்டுமென தம்மிடம் கோரப்பட்டதென்றும், அதனை நாம் தவிர்த்து, பகைமைகள் ஏற்படாதவகையில் இருமாடிக் கட்டடத்தை அமைத்துச் சிறுர்களின் இடநெருக்கடிச் சிக்கலைத் தீர்க்கத் தம்மால் முடிந்தவரை ஆவன செய்வதகவும் திரு. சிவசிதம்பரம் மேலும் கூறினுர். (சி)

# கடத்தப்பட்ட யுவதி இரட்சணிய சேனையில்

[யாழ்ப்பாணம்]

15 வயது இளம் பெண்ணைப் பெற்றோரின் பாதுகாப்பில் இருந்து கடத்திச் சென்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட 19வயது இளைஞர் தந்தையின் பொறுப்பின் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இளம்பெண் இரட்சண்ய சேனைக்கு அனுப்பப்பட்டார்.

சுதுமலையைச் சேர்ந்த கரீந்திரா ருக்மா எனும் 15 வயது இளம் பெண்ணைக் கடத்திச் சென்றதாக அதே ஊரைச் சேர்ந்த இராசதுரை பஞேகரன் என்னும் 19 வயது இளைஞர் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்கு யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைகளின் பின் நீதவான் இளைஞரை ரூ.500 பிணையில் தந்தையின் பொறுப்பில் செல்ல அனுமதித்ததுடன் இளம்பெண்ணை இரட்சணிய சேனைக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டதுடன் அப்பெண்ணின் நடத்தை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ் நன்னடத்தை அதிகாரி திருமதி வேதா சிவதாசனைப் பணித்தார்.

இச்சம்பவம் குறித்து பெண்ணின் தாயார் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் இருவருக்குமிடையே சில மாதங்களாகதொடர்பு இருந்ததென்றும் கடந்த 4ம் திகதியிலிருந்து மகளைக் காணவில்லையென்றும் முதலாம் எதிரியின் மீது தமக்குச் சந்தேகம் இருந்ததென்றும் தெரிவித்தார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து சனகராயன் குளத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டு ஆஜர்செய்யப்பட்டனர். மேல் விசாரணை அடுத்த மாதம் 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [சி–இ]

# தமிழ்க்காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு

(கரவெட்டி)

வடமராட்சிப்பகுதியில் தமிழ் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. இப்புனரமைப்பு வேலைகள் அடுத்தமாதம் 10ம் திகதி நடைபெறவுள்ளதாகஇளைஞர் காங்கிரஸ் செயலானர் திரு. ஆர். ஈ. ஆனந்தராசா தெரிவித்தார். அன்றைய தினம் கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

BAYER

ரொக்குத்தயன் 500 ஈ.சி.



வெங்காயப் பயிரைப் பாதிக்கும் ஸ்பொடொப்டராபுக்களை அறவே ஒழித்திட,
தரமான பாயர் பீடை நாசினி ரொக்குத்தயன் 500 ஈ. சி. பாவியுங்கள்.

ஹேக்கெம் லிமிட்டட்,
400, டீன்ஸ் ரோட், கொழும்பு - 10.

3637

# இன்றைய பலன்

ஆனி மாதம் 14-ம் திகதி

திங்கட்கிழமை

(28—6—82)

மேடம்: உறவுமுறைகளில் பிளவுகள் தென்படும். மனதில் உற்சாகம் குன்றும். அபாயகரமான காரியங்களில் ஈடுபடாது இருக்கவும்.

இடபம், பொதுப்பணி மூலம் புகழுக்கு இடமுண்டு. அரசியல் வாதிகளுக்கு அதிஷ்டம் அடிக்கலாம். பிதாவழி மூலம் பொருள்வரவு கிடைக்கலாம்.

மிதுனம்: பூமி விருத்தியுடன் புதிய தொடர்புகளும் பெருகும். அரசாங்க ஊழியராயின் உத்தியோக உயர்வுக்கிடமுண்டு. வெளிநாட்டுப் பயணம் ஒன்று தொடரலாம்.

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றி உண்டு. எதிர்பாராதவகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும் பகைத்தவர்களே உங்களைப்பாராட்டச் செய்வார்கள்.

சிங்கம்: பகைவர்கள் பதுங்குவர் பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறி போகலாம். முன் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும்.

கன்னி: சிந்தனையின் தாக்குதல்கள் உங்களை சிந்திக்க வைக்கலாம். குழந்தை ஒன்றின் உடல் நலம் பாதிக்கப்படலாம். அவசர முடிவை தவிர்க்கவும்.

துலாம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும். இனிதான பேச்சின் மூலம் எல்லாரையும் வசீகரிப்பீர்கள். தனச் சிறப்புக்கும் இடமேற்படலாம்.

விருச்சிகம்; செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும். நண்பர்களின் தொல்லைகளால் நஷ்டமடைவீர்கள். தொழில் புரியும் இடத்தில் புதிய எதிர்ப்பு ஏற்படலாம்.

தனு: தாய்வழி மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு. வேதனத்திலும் உயர்வு காணும். விவசாயிகளாயின் விளைபொருள் நலன் பெறும்.

மகரம்: மக்களால்மகிழ்ச்சி மனம் நிறைந்த வாழ்வு. புதுமையில் நாட்டம் புதுப்பொலிவும் உண்டு. கல்விகற்பவர்களுக்கு சிறப்புண்டு.

கும்பம்: தூரத்துச் செய்தி ஒன்று துயரத்தில் ஆழ்த்தும். [illegible] இடம் கொடாது உடல் நலத்தைப் பேணவும். அவதானம் வேண்டும்.

மீனம்; இதயத்தில் இன்பம் துள்ளும். பகைவர்கள் பணிவர் பாந்த நோக்குடன் செயல்படுவதன் மூலம் பொது மக்களின் பாராட்டும் கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

# கொழும்பு அத்தியட் சாதீன பேராயர் வடபகுதி விஜயம்

[அரியாலை]

வடபகுதிக்கு உத்தியோக பூர்வ விஜயஞ் செய்திருக்கும் இலங்கைத் திருச்சபை கொழும்பு அத்தியட்சாதீனப் பேராயர் பேரருட் திரு. சுவிதின் பெர்னாந்து ஆண்டகை நேற்று ஞாயிறு காலை நல்லூர் பரி. யாக்கோபு ஆலயத்தில் திடப்படுத்தல், திரு நற்கருணை ஆராதனைகளை ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்தினர். மாலை உரும்பராய் பரிசுத்த மகதலேனா மரியாள் ஆலயத்தில் திடப்படுத்தல், திருநற்கருணை ஆராதனைகளை ஒப்புக் கொடுத்தார்.

இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கைதடி நவீல்ட் செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் சிற்றாலயம் அமைப்பதற்கான அடிக்கல்லை நாட்டுவார்.

மாலை சுண்டிக்குளி பரிசுத்த யோவான் ஆலயத்தில் திடப்படுத்தல், திருநற்கருணை ஆராதனைகளை ஒப்புக்கொடுத்து அருளுரை நிகழ்த்துவார். பரிசுத்த யோவான் ஆலய சபையினர் பேராயருக்கு இரவு விருந்தளித்துக் கௌரவிப்பார். (அ)

## கூட்டுப்பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மத்தி கொட்டடி ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலய மண்டலாபிஷேக 24 வது திருவிழா நேற்று நடைபெற்றது.

நேற்று மாலை திரு. சி.சி. வரதராசா, திரு. மா. அய்யன் ஆகியோரின் பஜனை, கூட்டுப் பிரார்த்தனை ஆகியன இடம் பெற்றன.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மா வட்ட நீதிமன்றத்தில்

கீரிமலை காங்கேசன் துறையைச்சேர்ந்த காலம் சென்ற செல்லையா கைம்பெண் இராஜேஸ்வரி அம்மாள் என்பவரின் மரணசாதன மில்லாத மரணச் சொத்தினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்.

— மரணமெய்தியவர்

மரணசாதன

இல: ரி. 125

நியாயாதிக்கம்

செல்லையா சத்தியசீலன்
35, புதிய செட்டித்தெரு,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு 13.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1982–ம்ஆண்டு ஆனி மாதம் 30–ம்திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனகட்டளையாகப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1982–ம் ஆண்டு ஆனி மாதம் 22–ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

வரைவு.
க. குணரத்தினம்
மனுதாரின் சட்டத்தரணி

3664

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை மேற்கு பன்னாலை நடராசா மகள் ராதாதேவி என மறு நாமம் கொண்ட ஞானம்பிகை என்பவரின் மரண சாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

நடராசா கைம்பெண் யோகாம்பிகை பன்னாலை தெல்லிப்பழை மேற்கு.

மனுதார்

வழக்கு இல. ரி/28

எதிராக

1. தம்பு கனகரத்தினம் கதிர்காமத்தம்பி
2. தம்பு கனகரத்தினம் மகள் மகேஸ்வரி, இருவரும் பளவீடு இளவாலை.

எதிர்மனுதார்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1982ஆம் ஆண்டு ஆனி மாதம் 30–ந் திகதி காலை 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982–ம் ஆண்டு வைகாசி மாதம் 14–ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
சு. வ. கணேசன்
பதிவாளர்

தயாரித்தவர்.
(ஒப்பம்)
ம. சிதம்பரநாதன்
மனுதாரின் சட்டத்தரணி

3685

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் பொதுசன நூலக உத்தேச இணைப்பு மாடிக் கட்டடத்தின்

1-ம் கட்ட வேலை (கீழ்த்தளம்)

மேற்சொல்லப்பட்ட வேலை சம்பந்தமான 07–06–82-ம் திகதிய கேள்வி அறிவித்தல் தொடர்பான விளம்பரத்தில் தரப்பட்டுள்ள திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 01. | கேள்வி வைப்புப் பணமும், கேள்விப்பத்திரப்படிவம் ஆவணங்களின் பெறுமதியும் செலுத்தவேண்டிய கடைசித் திகதி | 19–07–82 பி. ப. 3–00 மணி வரை |
| 02. | கேள்விப்படிவங்கள், ஆவணங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய திகதி | 21–07–82 முதல் |
| 03. | கேள்விகள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசித் திகதி | 28–07–82 நண்பகல் 12–00 மணி |
| 04. | கேள்விகள் திறக்கப்படும் திகதி | 28–07–82 பி. ப. 3–00 மணி |

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
25–06–82.

(3679)

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 6–15, 9–15
சனி, ஞாயிறு 2–30
கமலஹாசன்
சட்டம் என்கையில்

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ரவி-விஜயா
நினைவில் நின்றவள்

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10–30, 2–30, 6-30, 9–30
கமலஹாசன்-சோபா-பிரதாப் நடித்த
அழியாத கோலங்கள்


ராணி (யாழ். நகர்) 10–30, 4–30, 7–00, 9–30
28–06–82—29–06–82 வரை
Wages of Fear
30–06–82 முதல்
விஸ்வரூபம்

Windsor (Jaffna)
Daily 10–30, 2–00, 4–30, 7–00 and 9–30 P. M.
BRUCE LEE in
THE GAME OF DEATH
(Color)
உலக சாம்பியன் புரூஸ்லியின் பயங்கரமான கராட்டி சண்டைகள் நிறைந்த படம்

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10–30, 2–30, 6–30, 9–30
வெற்றி முரசுகொட்டும் 2-வது மாதம்
கார்த்திக்-ராதா-தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை (கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ் நகர்) 10–30, 2–30, 6–30, 9–45
6-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்]
தினசரி 4காட்சிகள்
வெற்றிகரமான 7வது வசூல் வாரம்
* ரஜனிகாந் * சுஜாதா * விஜயன்
* கராத்தே மணி * ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

றீகல் யாழ். நகர்
தினசரி நான்கு காட்சிகள்
2-வது ஜனத்திரள் வாரம்
சிவாஜி, கீதா குமாரசிங்க, ஜெயபாரதி,
[இலங்கை நடிகை]
நாகேஷ், அனுராதா. பத்மபிரியா
மோகனப் புன்னகை

# ஈழத் தமிழருக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்கள் நல்லவர்கள். 'கலாயோகி' ஆனந்தகுமாரசுவாமி 60 ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டுள்ள 'இந்தியப் பெண்மணி' கண்ணீரும்-கம்பலையுமாக கண்கலங்கிநிற்கிருள் என்கிருர். ஆனல் நான் காணும் பெண்கள் தமது விடுதலைக்கு போராடுபவர்களை காணுகின்றேன்.

''வள்ளுவர் காமத்துப் பாலில் ''பெண்ணின் பெருந் தக்கதில்'' என்று அடித்துச் சொல்லுகின்ருர் பெண்களை சிறந்தவர்கள் என்று அடித்துச் சொல்லுகின்ருர்

சோலையிலே காதலன் காதலிக்காக காத்துக் கொண்டிருக்கின்ருன். அவள் வரும்வரை அவன் பூபறித்துக் கொண்டிருக்கின்ருன். அப்போது பின்னல் வந்த அவன்காதலிஅவன் கண்களைப் பொத்துகின்ருள். உடனே அவன் யாரது?' என்று கேட்டதும் காதலிதுடிதுடித்து விட்டாளாம் என்னைத் தவிர உன்னைத்தீண்ட யார் உளர் என அவள் கண்ணீர் வடிக்கின்ருள். இது எதைக் காட்டுகிறது? ஒருவனுக்கு ஒருத்தி என்பது பழங்காலக் கொள்கை. கம்பன் சொல்லுகின்ருன், இராமாயணத்திலே ஒரு காட்சி. அனுமான் சீதையை அம்சாக வனத்திலே கண்டபோது தன்னை அவள் ஞாபகப் படுத்துவதற்கு ஒரு நிகழ்ச்சியை அவள் காதில் போடு என்று இராமன் அனுமனிடம கூறுகின்ருன். முதலிரவு அன்று வளையல்கள் கொண்ட சீதையின் கரங்களை வருடிக் கொண்டே நான் இந்தப்பிறவியில் உன்னைத்தவிர வேறு ஒரு பெண்ணை தொடமாட்டேன என்று சொன்னதை சொல் என்கிருன்.

''உலகிலுள்ள காட்பியங்களுள், திருவள்ளுவர் ஒருவனுக்கு ஒருத்தி என்பதை வலியுறுத்தியவர். இராமாயணத்தில் ஏகபத்தினி விரதம் காட்டப்படுகிறது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த இலட்சியத்தை வேறு எந்த இலக்கியமும் உணர்த்தமுடியாது. உலக நீதிநூல்கள் எல்லாம் அறம், பொருள், இன்பம்மூன்றையும் இணைத்த நூல்களாக இல்லை. தனித் தனியான நூல்களே உண்டு. ஆனல் திருவள்ளுவர் தான் மூன்றையும் இணைத்து தந்தவர். அறம்என்பதுநெறி. நடத்தையைப்பற்றி சொல்லுவது தெருவிலே போகின்றபோது ஓரமாகப் போ'கச் சொல்வது அச்சத்தால் வந்த நெறி. திருடுபவனுககு கையை வெட்டுவது அச்சத்தால் வந்தநெறி. அடுத்தது வழக்காற்றுநெறி. பரம்பரையாக மேற்கொள்ளுவது, மனச்சாட்சியின் அடிப்படையில் எழுந்தநெறி மூன்ருவது நெறி. இந்தமூன்றுநெறிகளில் இந்த நெறிதான்சிறந்தநெறி ''மனத்துக்கண் மாசிலனுதல்'', என்று வள்ளுவர்கூறியிருக்கின்ருர், இதை எல்லோரும் பின்பற்றமுடியாது. இது அவசரத்தாலோ அச்சத்தாலோ உண்டாவதல்ல வாழ வழிகாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட நெறி

## நீதி நூல் என்ருல் என்ன?

நீதிநூல் என்பது எந்தச்சமயத்தையும் சார்ந்ததாக இருக்கக்கூடாது. சமயச் சார்பற்றதாக இருக்கவேண்டும் மேலை நாடுகளில் உருவான நீதிநூல்கள் சமயச் சார்பானவை. இந்தியா, சீன, ஜப்பான் முதலிய நாடுகளில் உருவானவை சமய சார்பானவை. இன்று தர்மத்தைக் கட்டிக் காப்பதற்கு சமஸ்கிருதம் காட்டப்படுகிறது. சீன செஞ்சீனவாக மாறியபின் சந்துபொந்துகள் எல்லாம் சீனவின் நீதிநூலான கான்பூஷியஸ் பெயர் சொண்ட மதக் கட்டிடங்கள் இடித்து நொருக்கப்பட்டன. கான்பூஷியஸ் அடியோடு எரிக்கப்பட்டது. இன்று அந்தநாட்டில் மதம் கூடாது என்று சொல்லுகின்ருர்கள். ஆனல் இந்த ஆபத்துக்கூட நீதி நூலான திருக்குறளுக்கு இல்லை. ஈ.வே.ரா.பெரியாரால் கூட திருக்குறளை சாட முடியவில்லை. காரணம் திருக்குறள் எந்த மதத்திற்கும் சொந்தமானது இல்லை. எவரும் எந்த மதத்தையும் பின்பற்றலாம் என்கின்ற நிலையை நாம் திருக்குறளில் காணக்கூடியதாக உள்ளது

''ஒருவன் கெடுதல் செய்தல் திருப்பிச் செய்யாதே என்று யேசு கூறுகிருர். திருவள்ளுவர் ஒருபடி முன்சென்று; ''கெடுதல் செய்தவனை நினைக்துப்பாராதே'' என்கிருர். 'இன்ன செய்தாரை மறந்துவிடு'' என்று சொல்லுகின்ருர்

''மனிதன் வாழ்வாங்கு வாழ்ந்து மறைகின்ற நிலை பற்றி பல வெளிநாட்டு சிந்தனையாளர்கள் சிந்தித்ததைவிட இந்திய சிந்தனையாளர்களின் சிந்தனை ஆழமானதாக இருக்கிறது. இது இரண்டு வகைப்படுகிறது. ஒன்று உயிர் துறந்ததும் ஆத்மா இறைவனேடு இரண்டறக் கலந்துவிடுவதாக ஒரு முடிவு. இரண்டாவது; ஆத்மா இறைவனேடு இரண்டறக் கலக்காமல் இறைவன் திருவடியை அடைகிறது. இறைவன் திருவடியைச் சென்றுஅடைகிறது. இதைச் சைவசித்தாந்தம் மிகத் தெளிவாக காட்டுகிறது ஆத்மா இறைவன் திருவடியை அடையமுற்பட வேண்டும். உயிர் இலக்கியத்தில் திருக்குறள், கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில், ஆறு பாடல்கள் மூலம் இதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ''இறைவனடி சேராதார்'' ''வேண்டுவர் வேண்டார்'' என்ற குறள்கள் மூலம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உருவாக்கித் தந்துள்ளார். இது இந்துசமயம் உலகிற்கு தந்த மாபெரும் கோட்பாடு. இதன் அடிப்படையில்தான் உலக நீதிநூல்கள் இரண்டறக் கலக்கும் நிலையை வலியுத்துகின்றன. இவற்றிற்கு எல்லாம் தலை ஊற்ருக இருப்பது திருக்குறள் தான். சைவ, வைணவ சமயங்களுக்கு பொதுவான சிறப்பிறல்பாக அமைவது இக் கோட்பாடுதான்.''


## ஹோம் பிஞன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான
**ORION-12''** (T. V. BLACK and WHITE)
விற்பனை செய்கின்றது
உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்
எம்மிடம் உள்ள அவசர தேவையான
மற்றைய பொருட்கள்
HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES-மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.
இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்:
ஹோம் பிஞன்ஸ் லிமிட்
இல. 463, காலி வீதி,
கொழும்பு—3
தொலைபேசி;58910

கிளை காரியாலயம்:
ஹோம் பிஞன்ஸ் லிமிட்
இல. 82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8310


# வசூலாகும்....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போலவே நான் செயல்பட வேண்டியிருக்கும்.

''இதுவரை நான் நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட முட்டைக் கோதுகளினுள் ஓவியங்களைத் தீட்டியுள்ளேன். சில நீல் முட்டையின் மேற்புறத்திலே தீட்டப்பட்ட ஓவியங்களை அங்குள்ள கலைக்கூடமானது நிரந்தரமாக காட்சிக்கு வைத்துள்ளது.

''பிரிட்டிஷ் எலிஸபெத் மகாராணியார், பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர் ஆகியோரின் உருவங்களையும் முட்டைகளினுள் வரைந்து அக் கலைக்கூடத்துக்கு அனுப்பிவைத்தேன். மகாராணியாரின் கரியத சிசான்றிதழ் ஒன்றையும் எனக்கு அனுப்பி வைத்திருந்தார்.

## இன்றைய நிகழ்ச்சி

''இன்று நான் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தும் எனது கண்காட்சியில் ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் உருவம் கீறப்பட்ட முட்டையொன்றையும் காட்சிக்கு வைத்துள்ளேன். இலங்கையின் மிக முக்கிய வரலாற்றிடமான சிகிரியாக் குன்றும் நான் தீட்டிய ஓவியங்களுள் இடம் பெறுகின்றது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் முட்டை ஓவியக் கண்காட்சியில் அன்பளிப்பாக வசூலிக்கப்படும் நிதியை யாழ். பொதுசன நூல்நிலைய புனரமைப்பு நிதிக்கு வழங்குவேன்.

## முட்டைக்குள் முருகன் ஓவியம்

திரு. எம். எம். சிவசண்முகம் கொண்டுவந்திருந்த ஒரு முட்டைக்குள் முருகன் கடவுளின் உருவம் தீட்டப்பட்டிருந்தது. ஓவியத் தாள்களில் கீறப்பட்ட முருகன் உருவமொன்றைப்போலவே கையில் வேல், தலையில் மணிமுடி, அழகிய உத்தரியம், பட்டுவேட்டி மார்பில் மணிமாலைகள் ஆகியனவற்றுடன் அருள் பொழியும் புன்முறுவலோடு அம் முருகன் உருவம் திரு. சிவசண்முகமூர்த்தியுன் கைவண்ணத்தில் ஜடிகொண்டிருந்தது.

முட்டையொன்றினுள்வரையப்படும் ஓவியமொன்றுபூரணமடைய எவ்வளவு காலமெடுக்கும்? நீங்கள் எவ்வளவு நேரத்தைச் செலவிடுவீர்கள் என்று நான் கேட்டபோது ஒரு ஓவியத்தை முழுமையாக வரைய சுமார் மூன்று மாத காலம் எடுக்கும். நான் இவ்வாறு ஓவியம் தீட்டத்தொடங்கியதும் தியானததிலிருக்கும் ஒருவரைப்போலவே முழுக்க முழுக்க எனது சிந்தனைகள் யாவற்றையும் ஒருமுகப் படுத்தி எனது வரைதலை நிறைவுசெய்வேன். 30 நிமிடத்துக்குட்பட்ட ஓய்வையே நான் ஓவியம் தீட்டும்போதெல்லாம் எடுத்துக்கொள்வேன். ஓய்வு என்பது கைக்கு மட்டும்தான். ஆனல் என் சிந்தனை நான் இறுதியாக விட்ட இடத்திலேயே தரித்திருக்கும்'' என்ருர்

அற்புதமான ஒரு கலையின் கர்த்தாவாக இருக்கும் நீங்கள் இதனை வேறெவருக்கும புகட்டும் நோக்கம் இல்லையா என்று வினவியபோது;

''இக்கலை ஏனைய ஓவியக் கலை போன்று எடுத்த உடனேயே வரையக்கூடியதொன்றல்ல. பொறுமை, சகிப்புத் தன்மை போன்றனவே இதற்குத் தேவைப்படும் மிகமுக்கிய மான பண்புகளாகும். இவை யாவருக்கும் இருக்குமென்பது அசாத்தியம். இவற்றைக்கைக் கொண்டு முயற்சித்தால் நிச்சயம்வெற்றிகாணலாம். சிலரை நான் அணுகி இக்கலையை அவர்களிடம் அறிமுகப்படுத்த முற்பட்டேன். ஆனல் அவர்களோ இதில் நாட்டம்கொண்டவர்களாகக் காணப்படவில்லை. ஒரு லட்சம் ரூபா சன்மானம் தருவதாகக்கூறி சில சிறந்த வரைஞர்களிடம் சவால் விட்ட போதும் கூட அவர்கள் இதில் வெற்றி காணத்தவறிவிட்டனர். ஆனலும் நான் நிச்சயம் இக்கலையைப் பிரபல்யப்படுத்தி ஒரு வாரிசை உருவாக்கவே செய்வேன்'' என்ருர்.

# லெப்டினட்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று சேர்ந்து ஏரியில் படகில் பயணம் செய்தபோது படகு கவிழ்ந்ததாயும், அதனலேயே இவர் மரணமடைந்தாரென கூறப்படுகிறது. ஏனைய இருவரும் தப்பிவிட்டனர்.

திருமலையிலிருந்து வரவழைக்கப்பட்ட கடற்படை ஹெலிகொப்டர் நடத்திய தேடுதலின் பின்னர் சடலம் மீட்கப்பட்டது.

இராணுவ மரியாதைகளுடன் இன்று பிற்பகல் இவரது ஈமக்கிரியைகள் புலோப்பளையில் நடைபெறவுள்ளது. சமீப காலத்தில் இராணுவத்திற்கு லெட்டினன்ட் தரத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழரில் வயதில் குறைந்தவர் இவரென்பது குறிப்பிடத்தக்கது. (சி)

# இப்படியும் நடக்கிறது

வட இலங்கை சங்கீத சபையின் பொன்விழா சிறப்பு நிகழ்ச்சியாக நேற்று முன்தினமிரவு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில், 'இசைமாமணிகள்' ராதா-ஜெயலக்ஷ்மி குழுவனரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

சங்கீத சபையின் உபதலைவராகவிருந்த அமரர் டபிள்யு. எம். குமாரசாமியின் நினைவாக அர்ப்பணிக்கப்பட்ட இந்த இலவச இசைநிகழ்ச்சியைக் கண்டு ரசிக்க, மண்டபம்நிரம்பி வழிந்தது. அவர்களது இசையில் எல்லோருமே கட்டுண்ட நாகமாகிவிட்டனர்.

கலைப்பரம்பரையை உருவாக்கிய ஒரு பெரியாரை இவ்விதமாக பெருமைப்படும்வகையில் கௌரவித்தது... நமது ஈழத்து கலைத்துறையில் ஒரு புதிய திருப்பம் மட்டுமல்ல, தமிழகத்துக்கும் நமது கலைப் பண்பாட்டைஎடுத்துக்காட்டிவிட்டது! வட இலங்கை சங்கீத சபைக்கு மூன்று சபாஷ் கொடுக்கலாம்!

ஊடுருவி

# 'தொழிற்கல்விமூலம்நிறைய வருமானம் பெறலாம்'

## - கோப்பாய் எம். பி.

(அரியாலை)

அரசாங்க பதவியை நம்பிக் கல்வி கற்று ஈற்றில் அலைவதிலும்பார்க்க மாணவர்கள் தொழிற்கல்வி கற்ருல் நிறைந்த வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும். எனவே இப்பகுதியில் உள்ள தொழிற் கல்விக்கூடங்களை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் எம். பி திரு. மு. ஆலாலசுந்தரம் கலந்து கொண்டு பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் பன்முகப்படுத்தப்பட்ட பணத்தின் ஒதுக்கீட்டுக்கு மட்டும் காத்திராது பணம்படைத்தவர்கள் மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்றும் வித்தியாலயத்திற்கு தம்மாலான உதவியைச் செய்வதாகவும் தெரிவித்தார்.

பாடசாலைக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்த வட்டாரக் கல்வியதிகாரிதிரு. ஆ. வ. தங்கராசா பேசுகையில், பெற்றேர் தம் பிள்ளைகள் விஞ்ஞானம் மட்டும் படிக்கவேண்டும்எனவிரும்பாது அவர்கள் தகுதிக்கேற்ற கல்வியைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், தொழிற் கல்வி கற்போருக்கு எதிர் காலம் சிறக்க வாய்ப்புண்டு என்றும், விஞ்ஞானக் கல்வி கற்றேர் பலர் படிப்பை முடிக்காதவராகவும் படிப்பை முடித்த பலர் வேலையின்றி அலைபவராகவும் இருப்பதைக்காணக் கூடியதாயுள்ளதாகவும் கூறினர்.

# திருக்குறள் மாநாடு

## இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ்மறைக் கழக 22வது மகாநாட்டின் இறுதிநாளான இன்றைய நிகழ்ச்சிகள் இராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அரங்கில் நடைபெறுகிறது.

காலை நிகழ்ச்சிகள் யாழ். பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறுகிறது.

யாழ். பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி வே. இராமகிருஷ்ணன், திரு. வை. கா. சிவப்பிரகாசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

காமத்துப்பாலின் சிறப்பியல்புகள்பற்றி இந்தியப்பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றுவர். மா)

# இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ்பேசும் அரசாங்க பொதுஊழியர்சங்க 17வது மகாநாடு இன்று காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. ஆ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

அமரர் வண. கலாநிதி ஹயசிந்து சிங்கராயர் தாவீது அடிகள் பிறந்ததினக் கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில்நடைபெறவிருக்கிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் ஜூன் மீ 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.P. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.